முருகப்பெருமான் துணை

**மகான் ஜம்புமகரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.06.2023**, வியாழக்கிழமை

1. தலைவனாக தருமனாக வந்த
   தவராஜா ஆறுமுக அரங்கா
   வளமான ஞானஉலகு அமைய
   வரம்பல தருகின்ற தேசிகா
2. தேசிகனே உன்பெருமை கூறி
   தெரிவிப்பேன் சோபகிருது மிதுனதிங்கள்
   ஆசிபட முன்னான்கீர் திகதி குருவாரம்
   (சோபகிருது வருடம் ஆனி மாதம் 14ம் தேதி, 29.06.2023, வியாழக்கிழமை)
   அறிவுரை ஆசிதனை ஜம்புமகரிஷி யானும்
3. யானும் உலகபாதுகாப்புற உரைப்பேன்
   உண்மைநெறி அரங்கன் நெறி
   ஞானவழி உலகினில் தழைக்கவே
   நாடெங்கும் பாதுகாப்பு பெருகும்
4. பெருகவே இயற்கை சீற்றம்
   பிரளயம் பேரிடர் துன்பம்
   வறுமை பிணி அல்லல் வாரா
   வல்லமையான ஞான பூமியாக
5. ஆகவே அரங்கன் அவதார
   ஆற்றல்மிக்க கொள்கையால்
   மிகைபட மாற்றம் கூடி
   முன்னேற்ற நிலைகள் வளரும்
6. வளரும் தரும ஞானபல
   வல்லமை மிக்க பூமியாக
   மலரும் ஞானவான்கள் கூடி
   மக்கள் சபை மகேசன்சபை போல

7. போலவே நீதிநெறி குன்றா
பொய்புரட்டு ஊழல் வஞ்சம் இல்லா
காலனும் அஞ்ச தரும ஆட்சி
கந்தன் ஆசிபட உலகம் தன்னில்

8. தன்னிலே அரங்கமகானின்
தனிப் பெருங்கருணை நிறைந்த
மன்னவர்கள் கூடி நின்ற
மக்களை காக்கும் ஞானஆட்சி

9. ஆட்சியதும் தரும பலம்
அளவிலா கொண்டவர்க்கே
ஆட்சி பலம் அரியணைபலம்
அமைந்து வரும் காலமதில்

10. காலமதில் அற்புதம் நிகழும்
கருணைபட அரங்கன் வந்த
பூலோக அவதாரம் தானும்
பூர்த்தி கண்டு சித்திகாணும்

11. காணவே கலியின் கயிலை
காக்கும் வேலவன் படைவீடு
ஞானக்குடில் பிரணவக்குடிலை நோக்கி
நம்பிவர சகலமாற்றமும் நிகழும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–